# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1334/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டியன் | த-பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர், | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

**எதிரிகள் ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து சார்பு ஆய்வாளராக அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி பூர்ணசந்திரபாபு பணி மாறுதல் காரணமாக ஈரோடு மாவட்டத்திற்கு சைபர் காவல் நிலையதில் பணி மாறுதால் காரணமாக அவரது கையொப்பம் தெரிந்த நான் ஆவணங்களின் அடிப்படையிலும், எதிரி தரப்பு ஆட்சேபனை இன்றியும் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி விசாரணை அதிகாரி கடந்த 27.12.2019 அன்று பணியில் இருந்த போது ஸ்ரீமதி என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று CSR 152/2019 என்ற மனுவை பார்வை செய்து மேற்படி விசாரணை அதிகாரி 27.12.2019 ம் தேதி இரவு 21.30 மணிக்கு மேற்படி மனுவை பார்வையிட்டு அழகப்பா காவல் நிலைய குற்ற எண். 114/2019 , பிரிவுகள் 354 இதச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5. பின்னர்** சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை சாட்சிகள் பாண்டுடரங்கன் மற்றும் ராக்கம்மாள் ஆகியவர்களை முன்னிலையில் தயார் செய்யப்பட்டு மேற்படி **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வபைடம் அ.சா.ஆ.7.** பின்னர் விசாரணை அதிகாரி 28.12.2019 பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் முன் ஜாமின் பெற்று விட்ட காரணத்தால் அவரை கைது செய்யமுடியவில்லை. பின்னர் வழக்கு விசாரணை முடிவு செய்து எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்ததின் அடிப்படையில் கடந்த 04.01.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கின் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். விசாரணை அதிகாரி சரியான முறையில் புலன் விசாரணை செய்யலாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 10:46:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.